

01.05.2018

படைப்பு குழுமம்

# மின் இதழ்

பதிப்பு - 21

# வரிக்குதிரை மேகங்கள்

தூர தூரத்தில்
நீ பயணித்துக் கொண்டிருக்கிறாய்
இதயத்தின் திருகாணிகள்
இங்கே கழன்று விட்டன

உனது சொற்கள் இதயத்தமனிகளில்
விரைந்து கொண்டேயிருக்கின்றன

சூரியனின் வெங்கலக்கரைசலை
அந்தி வானம்
அருந்தத் துவங்கிவிட்டது

வண்ணமேறி பிறந்த வரிக்குதிரைகளாய் அலையும் மேகங்கள்
உனது வழியில் எப்படித் தெரிகின்றன

மழையின் துளிகள்
உப்பைத் தேடி கடலுக்கு நுழைவதென நானும்
தேடி வீழ்கிறேன்

இவ்விரவின் மணித்துளிகளை
ஈச்சம்பழங்களாய் உருட்டி
எண்ணிச் சுவைப்பதைத் தவிர
வேறு வழியில்லை

பூமியின் அச்சு சுழலும் புள்ளி
யார் கண்ணிலும் படாமல் இருப்பதைப்போல்
நமது காதல் மறைந்தே வாழட்டும்

என்னிடம் பகிரப்பட்ட நம்பிக்கைகளை
நாட்கள் பிறந்ததும் அதற்குப் போர்த்துகிறேன்

எனது அணைப்பின் கதகதப்பை
நிலவினாலும் தரயியலாது என உணரும் நாளில்
நீ வானத்தை
நம் காதல் கடிதமென மடிப்பாய்

**தேன்மொழி தாஸ்**



மாரியம்மன் கோவிலும்
மாதா கோவிலும்
மசூதியும் என் நீண்ட
தெருவுக்குள்.....
ஜோசப்பின் கிறிஸ்துமஸ் கேக்கும்
பாய் வீட்டு பிரியாணியும்
என் வீட்டு மாவிளக்கு மாவும்
பரிமாறிக்கொள்ளப் படும்
சமத்துவ வீதியில்.
நேற்றைக்கு அடிபட்ட கந்தசாமிக்கு
ஆன்டனியின் ரத்தம்.
அகமதுவின் ஆபரேஷன்
சிலவுக்கு என் சாமி உண்டியல்
உடைக்கப்பட்டது.
மரியாவின் பிரசவத்தை
நூர்ஜஹான் பாட்டி தான்
பார்த்தாள்.
கன்னியம்மா பூப்படைந்த
சடங்கில் மாமா வகையில்
மொய்யெழுதினார் எட்வர்டு.
மோனிஷாவின் திருமண
நிகழ்ச்சியில் மகாதேவனின்
இன்னிசைக் கச்சேரி.
எங்கள் வீதி எல்லா
தெய்வங்களாலும்
ஆசீர்வதிக்கப்பட்டது!

**மதுசூதன்**



நாம் அமர்ந்து பேசும் இருக்கைகள்
அப்படியே இருக்கின்றன...
இன்று புதிதாய் வேறு இருவர்
அதில் அமர்ந்திருக்கின்றனர்...
நிர்பந்தங்களுக்கு ஒப்புக்கொடுத்து
நாம் தான் வெவேறு இடங்களில்
நம்மை அமர்த்திக்கொண்டோம்...
நம்மைச்சூழும் வெறுமையை
ஓர் அசட்டுப்புன்னகையில் அடைத்து
எல்லோர் எதிரிலும்
எளிதாய் கடந்து செல்ல முடியாதெனினும்
வேறு வழியில்லை நமக்கு...
மரத்தில் அமர்ந்துகொண்டிருக்கும்
பறவைகள் இரண்டு
நம் இருக்கையில் இருப்பவர்களைப்பார்த்து
இப்படிப் பேசிக்கொள்கின்றன...
இவர்கவளாவது நிர்பந்தங்களை வென்று
அவர்கள் விரும்பிய வாழ்வை
அடைந்து விடவேண்டுமென்று...!!!
அலையில் மிதந்து கரைதொட்டு நிலம் ஏறும்
ஆமையைப்போல்
நிர்பந்தமொன்று
அவர்களை நோக்கி அசைந்து வருகிறது....
பறவைகளிரண்டும் பறந்து செல்கின்றன..
அவைகளின் சிறகசைப்பு
அழுத்தப்படும் வாழ்வின் சுமையை
வெற்றிகொண்டதைபோலிருக்கிறது....

**சந்துரு**



என்ன முயற்சித்தும்
தூக்கம் வராத
ஒரு
நிசப்தமான பின்னிரவு
வேளையில்...

மின்விசிறியின்
சுழலோசை...

கடிகாரத்தின்
நொடிமுள்ளிசை...

இரவு விளக்கின்
மெல்லொளி...

இதயத்தின் லப்டப் ஓசை...

அசையாமல் அசையும்
ஜன்னல் விரிப்புகள்...

நெருக்கமானவர்களின்
மெல்லிய குறட்டைகள்...

பிள்ளைகளின் பிள்ளையார்
சிரிப்புகள்..

சுழலாடும் ஆழ்மன
நினைவுகள்...

கண்திறந்தே காணும்
கனவுகள்...

இதுவரை
அறியாததை அறிய செய்து
ரசிக்காததை ரசிக்க வைத்து
புது அனுபவம் தந்தது
இத்தூங்கா இரவு...

**பிரபுசங்கர்**

கட்டுக்கட்டாய் செலவழித்து
கரைக்க முடியாத
கனத்த சோகத்தையும்...
காற்றின் மொழியில்
கதை சொல்லி...
இலைகளை
தலையாட்ட வைத்து
பார்ப்பவர் மனதை
பறவையாக்கியே
பரவசப்படுத்திவிடுகின்றன...
கிளையமர்ந்த மைனாக்கள்...!

**குமரன்**

மத்திய சென்னை
பத்தாம் எண் டவுனிங் தெரு
மதுபான கேளிக்கை விடுதியில்
பூனைக்கண் இளைஞனோடு
தோள்சாய்ந்து பகார்டி பருகுபவள்
தன்னை மேக்னா என
அறிமுகம் செய்து கொள்கிறாள்
ஆறுமுக நயினார்
டி கள்ளிப்பட்டி வங்கியொன்றில்
மகள் மகேஸ்வரிக்கு
பணம் போடும் படிவம் நிரப்பித்தர
அனைவரிடமும் அல்லாடுகிறார்
பூனை கண்ணனுக்கு
நயினாரை தெரியாது
நயினாருக்கு மேக்னாவை தெரியாது
உறக்கம் வரா இரவுகளில்
தலையணை ஈரம் தோய
மேக்னாவுக்கு மட்டும் தான்
மகேஸ்வரியாய் இருந்த பொற்காலங்களை
நன்கு தெரியும்....

**கோ.ஸ்ரீதரன்**

தாயைப் பிரிந்தப்பூ
மீண்டும் பூத்தது
மகளின் கூந்தலில்.....

**ஐ.தர்மசிங்**



பைத்தியம் போல எழுதிக் கொண்டிருக்கும்
கவிஞனொருவனை பார்க்கப் போயிருந்தேன்.
நானோ கவிஞனைப் போல எழுதிக்கொண்டிருக்கும் பைத்தியம்.
அவனோடு பேசுவது குளத்தோடு பேசுவது போலிருந்தது.
குளத்தின் மீது சிறுசிறு கற்களை வீசினால் அது வளையம்
வளையமான வார்த்தைகளால் நம்மிடம் பேசுமே, அப்படித்தான்
அவனும் பேசினான்.
அவனது கவிதைக் கோட்பாடுகளைப் பற்றி கேட்டதும்-
எங்கிருந்தோ பறந்து வந்த
இரண்டு ஒளிக் குஞ்சுகள் அவன் கண்களில் அமர்ந்து கீச் கீச்
என்று பாடத்துவங்கின.
என் கவிதை என்பது கடலில் நீந்தும் மீனல்ல-
பூமியில் நீந்தும் கடல் என்றான்.
பேச்சின் இடையே கொஞ்சம்
நீர் அருந்தினான்.
அது நீரருந்துவது போலவே இல்லை.
உதடுகளால் நீரை காதலிப்பது போல் இருந்தது.
அடுத்த பிறவியிலாவது இப்படியொரு கவிஞனுக்கு காதலியாக
பிறந்து
என்னை பருகக் கொடுக்கவேண்டும் என்று நினைத்துக்
கொண்டேன்

**கார்த்திக் திலகன்**



அசை போடுகிறது மாடு
தான் மேய்ந்த இடங்களை

**சிவா முத்துக்குமரன்**

இரவுக்கோப்பைக்குள்
குறையக் குறைய
நிரப்பிக் கொள்கிறாள்
நிலாப் பெண்...
வண்ணங்களுக்குள்
கட்டுப்படாத
ஒரு நிறத்தில்
விளைந்து கிடக்கிறது
வானம்...
பூக்களை உதிர்த்து
சுவாசித்துத் தன்னைப்
புதுப்பிக்கும்
பூமரமென
நள்ளிரவுக்குள் புதைந்து
எனக்காக கவிதைகளுக்குள்
நானும் சுவாசித்து
மெல்ல மீட்டெடுத்துக்
கொள்கிறேன்...
உன் மனக்கதவை
சற்றே மூடி வை...
நினைவலைகள்
என்னை சுற்றும்போது
மீண்டும்
என் சுயமிழந்து
காலக்கதிக்குள்
காணாமலேயே போய்விடுவேனோ
என அச்சமாயிருக்கிறது...

**மதுரா**

மனம் லயித்து லயித்து..
கிறங்கிப்போன பாடலொன்றை..
பெயர் தெரியா யாசகனொருவன்..
உள்வாங்கி குழலொன்றுக்குள்..
செலுத்தி, காற்றின் தயவோடு..
விரல் பொத்தி, விரல் பொத்தி..
துளைகள் வழியே..
மெல்ல கசியவிடுமந்த கீதம்..
காதுகளுக்குள் நுழைந்து..
அனிச்சையாக கண்களை..
கசிய வைக்கும் இக்கணத்தில்..
மனம் வேண்டுகிறது..
என் மாரோடு தலைசாய்க்க..
நீயும் இருந்திருக்கலாமென்று..!

**ம.செல்வகணேஷ்**

எல்லையில்லாப் பேரமைதியில்
திளைத்துக் கொணடிருக்கிறேன்,
பனிக்குடம் உடைத்து பற்றியிழுத்து
தொப்புள் கொடியறுத்து
சுடு மணலில் வீசியெறிந்த
கருணையற்ற கரங்களால
பின்புற மணலை தட்டி விட்டு
புடவை மடிப்புகளை நீவி சரிசெய்தபடி
சரி போகலாம் என்கிறாய்.

**ஜி.சிவக்குமார்**

பன்னிரண்டு ஆண்டுகளாய் வாழ்ந்து
விற்கப் போகும் தம் வீட்டினை
கடைசியாய் தொட்டுப் பார்க்கும்
வயோதிகக் கரத்தின் நடுக்கம்
நொடிமுள் ஓசையாய் ஒலிக்கிறது,
அவ்வீட்டுச் சுவர்களெங்கும்.
வாழ்வின் இறந்தகால நினைவுத் தடங்களை சுருக்கென தைக்கும்
கடிகார முட்கள்
பின்னோக்கி நகர்கின்றன
பதினொன்று, பத்தென
வீட்டுக் கடன் குரல்வளையை
நெறித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து
கடன் வாங்கிக் கட்டிய வீட்டில்
மகிழ்வாய் வாழ்ந்த முதலாமாண்டு வரை.
பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்
முட்டை வடிவில் இருந்த
சொந்த வீடு பற்றிய கனவு கூட
இப்பொழுது வெகு தொலைவிற்கு
பறந்திருந்தது சில சிறகுகளை உதிர்த்தவாறு.
கருப்பு வெள்ளை ஆடை உடுத்தித்
தொங்கும் பூட்டின்
சாவித்துவாரத்தில்
முத்தமிட்டுக் கொண்டிருக்கும்
இரு கேள்விக்குறிகளுக்கு இடையே
ஒளிந்து கொண்டிருக்கிறது
விடை யறியா
நிகழ் காலமும், எதிர்காலமும்..



**ஷைள**

# ஒரு முத்தம் பிரித்துப்பார்க்கப்பட்ட போது

பிரத்யேகக்காட்சிகள்
வெட்டிவேரை கசக்கிப்பிழிந்து உயிர் குடிப்பது

ஒரு முத்தம் பிரித்துப் பார்க்கப்பட்ட போது
உட்கிடந்தது
உடைந்துபோன ஒரு கோபத்தின் பல துண்டுகள்

நகை உவகை பொருட்டெனில்
அன்பின் ஊற்று அழுகை

பாலை என்பது தனிநிலமன்று
குறிஞ்சியும் முல்லையும் நல்லியல்பு குறைவுபடின் உருவாவது

காளியிடம் காமம் பற்றிக்கேட்க
இடுப்பின் கயிறொன்றால்
இறுகக்கட்டப்பட்டிருப்பதைக் காட்டுகிறாள்...

**லதா நாகராஜன்**

கோவில் யானை
இறுக்கமாக கட்டப்பட்டு இருக்கிறது
சுதந்திரம்

**சாண்டில்யன் விவேகானந்தன்**



# பற்கள் நீள மாறும் வரைதல் நீ

முகம் ஏந்தி முத்தமிட்டபோது
பட்டாம் பூச்சிகளை அறையெங்கும்
பறக்க விட்டேன்...

கைகள் சுற்றி வளையம் செய்தபோது
மலைச்சரிவுகளில் தூரியாடினேன்...

நெற்றியும் நெற்றியும்
முட்டி முக்கோடு மூக்கு பட்டு
மெல்ல சரிந்து
கன்னம் கடிக்கையில் நீ
மெல்ல சிரித்ததை
எப்போதாவது எழுத வேண்டும்...

முகம் உரசி மார்புகள் குலுங்க
எக்கிய வயிறோடு
தொப்பை தீண்டும்
இறுக்கத்திலொருமுறை
கண்கள் மூடி திறக்கையில்
சித்திரம் உடைத்தேன்...

கால்கள் பின்னிய போது
கதகளி ஆடிய கட்டிலில்
நானும் கொஞ்சம் ஆடினேன்
உன்னிசைவில்.....

பளிங்கு தேசம் கடக்கையில்
பரிதவித்த உன்னை பார்த்தது
பித்து நிலையின் ஜென் தத்துவம் எனக்கு...

கத்தும் குயிலோசையை
நீ மெல்ல முனகிடும் போது
நவீனமாக்கினேன்...

நிறமற்று கிடக்கையில்
புரவியின் கேசத்தோடு
வேதாளம் செய்தே தூண்டினேன்
பற்கள் நீள மாறும் வரைதல் நீ என்று.....

சரியாக பூட்டிக் கொண்ட
மாயத்தில் மெய்ம் மறந்த
கடவுளானேன்...உன்னைப்போலவே...

கனவுக்குள்ளிருந்த நீ
அப்போதே எல்லாம் புரிந்தது
என்று கிசுகிசுத்தாய்
அது ஹைக்கூவின் பின்பக்கம்......

மீண்டும் ஒரு ரகசியம் கூறுகிறேன்...
வெறும் உடலால் மட்டும்
புணருவதில்லை நான்.....

**கவிஜி**

# ஆறுக்கு நாலு

அறுக்கு நாலு மெத்தையில்
இடப்பக்கத்தில்
காற்புள்ளியளவிலே இடம்.
வலப்பக்கத்தில்
அதற்கும் குறைந்தளவே.
மூத்தவளும் இளையவளும்
ஆக்கிரமித்துக்கொள்ள
நின்றபடியே இடம் கிடைக்குமாவென
கண்களால் நுழைந்து துழாவுகிறாள்
இவ்விருவர்களை ஈன்றவள்.
பெரும்பாலும் என்பதை காட்டிலும்
ஒட்டுமொத்தமாகவே பெருந்துயரையே தரும் ஆக்கிரமிப்பு.
தந்தையென்ற என்னிலை
பிறவிப்பயனைதருகிறது
இந்த ஆறுக்கு நாலு மெத்தையில்.

**துரை.நந்தகுமார்**



பன்னிரு கைகளென..
கோர நகங்களென..
கோரைப் பற்களென..
கோபம் கொள்கிறது மனம்...
என்னை நானே ஆத்திரத்தின் உச்சியில் ஆழ்த்தி
பின் ஒடிந்து வீழ்கிறேன்...
உங்கள் வெறுப்பின் மீதொரு மேடை அமைத்து
ஆனந்த தாண்டவம் ஒன்றை அரங்கேற்ற
ஆசை எனக்கு...
உங்கள் நம்பிக்கைகள் எனக்கு
நம்பிக்கையற்று போன கணத்தில்...
உங்கள் வெறுப்பையோ..
உங்கள் ஆணவத்தையோ..
மோதி மிதித்துவிடும் துணிவிருக்கிறது எனக்கு...
ஆனால் நீங்களோ உறவெனும்
அடையாளம் பூண்டு வருகிறீர்கள்..
எனக்கு நம்பிக்கையில்லா
வரலாறு ஒன்றை சொல்கிறீர்கள்...
உங்கள் கட்டுப்பாடுகளை சீர்வரிசையென
என் கையில் திணிக்கின்றீர்கள்...
என் வயது உங்களுக்கும்
உங்கள் வயது எனக்கும்
அறியாமையின் அடையாளமாய் தெரிகிறது..

**வித்யா சிவலிங்கம்**



யுகச்சக்கரத்தின் கடையாணியைக்

கழற்றிக்கொண்டிருந்தான் அவன்
மேகப்புழுதியை மேனியெங்கும் அப்பியபடி
கடலுக்குள் பாய்ந்தது
அழுக்குநிலா அக்கினிதோய்த்த அம்புகளேந்தியபடி
வெள்ளைப்புரவிகளை
விரட்டிக்கொண்டிருந்தான்
சூரியன்
இப்போது
தென்றலின் இறகுகளைப் பிய்த்து
சாமரம் செய்துகொண்டிருந்தான்
அவன்
மணிக்கொருமுறை தலைசிலுப்பி
நரைமுடிகளை உதிர்த்தது
மரம்
வயிறுபுடைக்க மீன்களை விழுங்கிவிட்டு
செரிமானத்துக்காக நகர்ந்தது -
நதி
அவன் இப்போது
தூரிகைஎடுத்து
அடிவானத்துக்கு
சிவப்பு வண்ணம்
தீட்டிக்கொண்டிருந்தான்
மேகப்பொதிகளைத்
தலையணையாக்கி
கால்களை
நீட்டிப்படுத்து
நித்திரையிலிருந்தது -
மலை

அகலமாய்
சிறகுகளை விரித்தபடி
பள்ளத்தாக்கை நோக்கி
பறந்துபோனான் -
அவன்
தலைகுளித்துக்கொண்டிருந்த செடிக்கு அடியில்
குடைபிடித்துக்கொண்டிருந்தது -
காளான்
நீலப்புடவை உடுத்தியபடி
நிலம் நோக்கி இறங்கியது
தூரத்து -
வானம்
வண்ணம்தீட்டிய
பட்டாம்பூச்சி களுக்கு
முத்தமிட்டுக்கொண்டிருந்தான் -
அவன்
ஒரு
கனத்தமழைக்குள் கரைந்து கொண்டிருந்து
அவனது -
கடைசி சுவாசம்
மனநிலை சரியில்லாதவன் என்னும்
ஒற்றை முகவரியோடு அலையும் அவனை
இதற்கு முன்பும் நான்
எங்கோ பார்த்திருக்கிறேன்
அநேகமாய் அவன் ஒரு கவிஞனாகவும்-
இருக்கக்கூடும்..........!

**அழ. இரஜினிகாந்தன்**

# அன்பின் துளி

நினைவுகளின் உள்ளீடிலிருந்து
கடந்த காலத்தை இழுத்து
அசைபோடுகிறேன்.

ஆநிரைகளின் மேலமர்ந்தபடி
உண்ணிகளைத் தின்னும்
பறவையின் முகம்
நண்பனைப் போலிருக்கிறது.

பழைய பாதைகள் மாறியிருக்கிறது
புதிய வழித்தடமும்
பழைய ஊருக்குப் பயணிக்கலாம்
பழைய மனிதர்கள் இல்லாத காற்றில்
எந்தச் சுவாசம் எனை மீட்டும்.

அவசர நிமித்தமாய்
இருசக்கரத்தில் பயணிக்க
மீச்சிறு இடைவெளியில்
தலைக்கு மேல் பறக்கும் பறவை
ஒரு கவிஞனை மூளைக்குள்
சொருகிவிட்டு நகருகிறது.

நினைவின் தடுமாறலில்
இருசக்கரத்திலிருந்து குதிக்கிறேன்.
சக்கையைப் பிழிந்து இனிப்புச்சாறு வழங்கும்
முகம் அறியா மூதாட்டி
பார்த்து தம்பி
அடிபட்டுருச்சா என்கிறாள்.

இவ்வுலகெங்கும் கொட்டிக்கிடக்கும்
அன்பின் துளி பருகவாவது
இன்னும் கொஞ்சம் வாழவேண்டும்.

**குமரேசன் கிருஷ்ணன்**



கூட்டமாய் மடிந்த பருந்துகளின் பிணங்களை
கசியும் தன் கண்களுடன் கடந்து வந்த
ஊர்க்குருவிகள் உயரப்பறக்கும்
அலைகளின் விசையில் நிலையற்ற படகு
மேலும் கீழுமாய் ஆடி அசைந்து கடலுக்குள் விரையும்
கரை ஒதுங்கிய அலையின் நுரைகள்
வீசிய காற்றிலுமிருந்த உப்பின் கரிப்பை
வியந்துணர்ந்துக் கரையும்
சில நினைவுகளைச் சுமந்த நிராதரவான
கிளைகளில் தொங்கிய சிதைந்த கூடு
குஞ்சுகளின் சத்தங்களை எதிரொலிக்கும்
இடைவிடாது படபடத்த
தன் சிறகுகளின் தசைநார்களில்
கூண்டில் அடைபட்ட பறவை
பறத்தலின் வலியை உணரும்
நத்தைகள் விட்டுச்சென்ற சங்குகளை
கூடுகளாய் தூக்கியவாறு
புலம்பெயரும் துறவி நண்டுகள்
பாறைகளின் இடுக்குகளில் சென்று மறையும்
அதன் காலடிச்சுவட்டை கரைதொடும்
அலைகள் அழித்துச் செல்லும்
அலையோசையின் ஓயாத ராகங்களின் மடியில்
ஆதவன் உறங்கச் செல்லும் வேலையில்
ஆர்பாட்டமில்லாத பகல் இரவினை அழைக்கும்
மூங்கில் காட்டின் வழியே
இசையை சுமந்து வந்த காற்று
தந்திகள் அறுபட்ட கருவிகளின் இசையை
நிரப்பப்படாத அந்த பகல் பொழுதின்
வெறுமை வெதும்பிய திருவோட்டின் அருகில்
இறுதியாய் கானமொன்றை
இசைத்துக்கொண்டு அமரும்
தேனாய் சுரக்குமொரு இரவின் பாடல்
கரைகளில் கூடுகளை விட்டுச்சென்ற நத்தைகளின்
ஆற்றாமைகளை அறிந்தவர் எவரோ

**ர. மதன் குமார்**



தேதி பத்தாச்சு ரேசன்ல இன்னும் ஒண்ணும் வாங்கல

இன்னிக்கு பிரதோசம்
இன்னும் வீடு மொழுகல
பட்டீஸ்வரன் பட்டிக்கு சாணி எடுக்கப்போகணும்

ஓஏபி வந்து மூணு மாசமாச்சு
நேத்தே வந்து வாடகபாக்கிக்கு சத்தம் போட்டுட்டு
போயிட்டாரு வீட்டு ஓனரு

நகைக்கு வட்டி கட்டச்சொல்லி ரெண்டுதடவ லெட்டர்
போட்டுட்டான் பேங்க்காரன்

ரெண்டு சீலை எடுத்ததுல இன்னும் முன்னூறு ரூவா
செட்டியாரம்மாக்கு தரணும் எதாவது பேசிடுவாளோனு
பயமாருக்கு

ஜாதிமல்லிய செடிய கவாத்து எடுக்கணும்
கம்பளிப்பூச்சி விழுந்த முருங்கமரத்துக்கு மருந்தடிக்கோணும்

துணி தொவக்கிறவளுக்கு இன்னிக்கி காசு தரதா
சொல்லியிருக்கேன்.நாலு நாளு கூடிப்போச்சு.

வீரப்பூர் போக வேனுக்கு பழனாத்தக்கா கிட்ட
நாளக்கி பணம் தரோணும்

ஊருக்குள்ள இருக்கிற கையகல எடம் பொதராக்கெடக்கு
பெரியசாமியண்ணன் இந்தவாரக்கடேசில
சுத்தம்பண்ணித்தரதா சொல்லியிருக்கு
ஒரு குடிசயப்போட்டாவது போயிடலாமின்னு தான்

அப்பாக்கு சாமி கும்பிடோணும்
வீடு பூச நாயித்துக்கிழம வாரதா பார்வதி சொல்லியிருக்கா

ரெண்டு நாளா காக்கா கரஞ்சிட்டே இருக்கு யாரு
வரப்போறாங்கனு தெரீல

பால்காரனுக்கு பத்துநா காசு தரணும்
பால்காசு நிப்பாட்டுனா பாவமாயில்ல

குளிக்கப்போகயில கால்மடங்கி
கழுத்து தொங்கி உசிரு போயி
ரெண்டுமணி நேரமாச்சு
நல்லவேள பின்னாடிக்கதவ சாத்தல
எப்படியும் பத்துமணிக்கு வண்ணாத்தி வந்து என்னியப்பாத்துடுவா

ம்ஹூம்.
இப்ப புதுசா ஒரு கவலை
யாரு எனக்கு வெப்பாங்க
இரவல்கொள்ளி

**அன்பி**

உன்னிடம் தோற்றுவிட்டேன்
தோற்ற உணர்வு துளிக்கூட இல்லை
மேலும்,
உன்னிடம் தோற்றது எப்படி தோற்றதாகும்?

தோல்வியிலிருந்து
ஒரு பாடம்
தன்னம்பிக்கை
தடுமாற்றம்
தன்முனைப்பு எதுவுமின்றி
சிறுமுள் பட்டுக் கிழிந்த
பாம்புத் தோலைப் போல
இந்நாளின் மீது கிடக்கிறது
என் தோல்வி.

வெற்றிக் களிப்பு அல்லது
தோல்வியிலிருந்து மீள்தலின் பொருட்டு,
உச்சி முகர்ந்து
நீ தந்த முத்தத்தில்
மீண்டும் மீண்டும் தோற்க தோன்றுகிறது.

இதயத்தில் செருகு
இன்னொரு குறுவாள்.

**மா. காளிதாஸ்**



# ஸ்டெர்லைட்

சாம்பல்பூத்து
உள்ளே கனன்றுகொண்டிருப்பது
அக்கினிக் குஞ்சுதானே.
பிஞ்சென்றும் மூப்பென்றும்
உனது களமாடி குணத்துக்கு
பேதமில்லைதானே.
காற்று விசமாகி கவ்வும் நாள்வரை
காத்திருக்கவா முடியும்.
வேதாந்தாவின் அடுப்பில்
எரிந்து கொண்டிருப்பது
நம் எதிர்காலம்தான்
நெருப்பை அணைக்க நீர்கொண்டு செல்லாதே
அடுப்பிற்கு அச்சம்வர
தீ கொண்டுபோ!
தூத்துக்குடியொன்றும் தூரமில்லை
இதயத்திற்கும் வயிற்றுக்கும்
இடைப்பட்ட தொலைவுதான்.
அதில்
கனவுகளைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு
கஞ்சிக்கு அலைந்து திரியும் அப்பாக்கள்.
மரத்தடி தொட்டிலிலுறங்கும்
பட்டுப் பூக்களுக்கு
சேற்றிலிருந்து பாலூட்டவரும் அம்மாக்கள்.
அண்ணன் தம்பிகள்
அக்காள் தங்கைகள்
சவ்வுமிட்டாய் கடிகாரம் கட்டி சிரிக்கும் குழந்தைகள்
எல்லோரும் இருக்கிறார்கள்.
குரலெடு
கூவு.
கெஞ்சல் தவிர்த்து கர்ஜி!
அதிகாரத்திற்கே அச்சம் வர எழு.
நியாம்கிரியில் இதே வேதாந்தாவிற்கு
எதிராய் எழுந்த
கோண்டு இன வீரனைப்போலே!

**குறிஞ்சி நாடன்**



காதலித்ததுண்டா நீ
நான் மிச்சமாகவே
அழுததுண்டு

கவலைகளைப்பற்றி நீ ஏதாவது சொல்
என் உறக்கத்தை கெடுக்க விரும்பிடவில்லை நான்

கண்ணீரை பற்றி நீ என்ன நினைக்கிறாய்
குழந்தைகளின் அழகு மொழியது

அன்பை பற்றி உனது கணிப்பு என்ன
நான் ஆகச்சிறந்த
வேடதாரி

உயிர் வலியை நீ உணர்ந்ததுண்டா
நான் ஊசி முனையின்
வலிமையை அறிந்ததுண்டு

கவிதையை பற்றி நீ என்ன சொல்வாய்
நான் பொய்யுரைக்க
காரணமான பிரம்ம வார்த்தையது

உலகம் உனது பார்வையில்
எவ்வாறு
நான் பொதுவாக பொறாமை
கொள்வதில்லை

துரோகத்தை பற்றி நீ ஏதாவது சொல்
நண்பனை தவிர
வேறெதுவும் தெரியாதெனக்கு

கடவுளை நீ விரும்பியதுண்டா
நான் பசியோடு
பல இரவுகளில் படுத்ததுண்டு

ஏழைளை நீ எவ்வாறு எதிர்கொள்கிறாய் உண்மையில்
நான் தெய்வங்களை வணங்குவதுண்டு

நேரங்களை நீ எவ்வாறு கடத்துகிறாய்
என் பகலினை பற்றி
அதன் இரவிடம் கேள்

உறக்கத்தை பற்றி நீ நினைப்பதென்ன
என் மரணத்திற்கான
சிறு ஒத்திகையது

எல்லாம் சரி என்னைப்பற்றி
ஏதாவது சொல்
எனக்கு என்னைப்பற்றியே
ஏதும் தெரியாதே

பிறகெப்படி உன்னைப் பற்றி
சொல்ல ..!

**கதிர்**

குருவியொன்று
பனங்காயைச் சுமந்து கொண்டு போகிறது
எறும்புகள்
நதிகளைத் தூர் வாரிக் கொண்டிருந்தன
மரம்வெட்டிகளை மரங்கள் சாப்பிடுவதாக
கிளிகள் பேசிக் கொள்கின்றன
விவசாயிகள்
காலால் நிலத்தை உழுகிறார்கள்
இராக்கெட்டுகளை உருக்கி
கலப்பைகள் செய்து கொண்டிருந்தார்கள்
பண்டம் மாற்று வந்ததால்
பசிகள் இறந்து கிடக்கின்றன
சுவர்க்கம் யாருக்குச் சொந்தமென்று மதவாதிகள்
நிலாவில் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்
அரசியல்வாதிகள் கனிமவளங்களை கொள்ளையடிக்க
செவ்வாய் கிரகத்திற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள்.
புங்க மரக்காற்றிலமர்ந்து
இந்தக் கவிதையை எழுதுகிறேன்
கனவாக இருந்தாலும் கலைத்து விடாதீர்கள்.

**முகமது பாட்சா**



காதலிக் காவிட்டால் கத்தியால் குத்துவதோ?
சோதனைக் காலமோ தோகையர்க்கு? – மாதவத்தால்
வந்துதித்த வஞ்சியரின் வாழ்க்கை விளையாட்டோ?
நொந்ததுள்ள மிந்த நொடி.

**சியாமளா ராஜசேகர்**

# இறைஞ்சிச் சாதல்

எதற்கும் பொருளில்லை
அணைக்க இயலா
வெகுதூர உடலுக்காய்
காதல் கசிவதற்கு முன்னமே
வெயில் பட்டு உலர்ந்துதிர்ந்து
பாலையில் நிற்கும் ஒற்றை
மொட்டை மரமாகிறது இக்கூடு.,
மறுதலித்து மறுதலித்து
உற்பத்தியில் பயன்படுத்தவென்று
சேமித்த சகல அன்பையும்
வெகு மூர்க்கமாய்
விண்ணில் வீசி எறிய முனைகிறேன்..,
முயற்சி எனும் ஏனைய காரணிகளின்
சிறகிலிருந்து ஒவ்வொரு
இறகாக பிய்த்து எறிந்து
ரத்தஞ் சொட்ட திகம்பரனாகிறேன்..,
ஒரு பிடி கருணை,
ஒரு பிடி சாதம்,
ஒரு பிடி ஏக்கம்,
ஒரு பிடி தவிப்பு,
ஒரு பிடி காத்திருப்பு,
ஒரு பிடி கனவு என
இருப்பது,
இருப்பதாக நம்பப்பட்டவை
அனைத்தையும் தவிர்த்து
இந்நிலத்தில் தொழுங் கொற்றவையிடம்
அனைத்தையும் தாரைவார்த்து
கூடலும் கூடல் நிமித்தமுமான
குறிஞ்சிக்கு நகர்த்த முருகுவை
முன்நிறுத்தித் தேம்பியழ ஆரம்பிக்கிறேன்.

**வேதநாயக்**



கூழாங்கல்லை..
போலவே
தேய்ந்து கிடக்கிறது
உழவனின் தேகம்...

வறண்ட
நிலம் போலவே
வெறுமனே
உழவன் மனைவியின்
கழுத்து
கருத்த கயிற்று
கீரலோடு

வயிறு
உப்பி கிடக்கிறது
செத்த மாடு

பிறந்த உடனே
எருவென ஆகியது
நாற்று

எரிக்க
கடைசி விறகானது
ஏர் கலப்பை

படைக்க
யாருமின்றி
இறந்துபோனான்
இறைவன்

பாவம் அந்த காக்கை
கூழாங்கல் உள்ளிருக்கும் நீரை
கொத்துகிறது...

**வீ.கதிரவன்**

ஒரு குருவியின் தலையில் அமர்ந்த பனம்பழம் என
நீ
அமர்ந்திருந்து எழுந்துபோன என்னில்
சுமைச்சுவடு நீங்கவில்லை
கோடையின் நீர்த்தடம் உன்னில்
பயணிக்கும் கணம் ஓடிக்கலக்க
உடன்துடிக்குமென் வியர்வை

நெடும்பின்னல் வறட்சி முத்தப்பாய்ச்சல்களால்
கடையோடும் நீர் பாதவழி நிலமெங்கும்

கைகோர்த்த முன்னிரவு அம்பெனப் பறக்கும் பின்னிரவு நோக்கி

மெழுகின் துளியூண்டு அன்பு
உன்னில் வழுக்கி உருண்டோடும் சமுத்திரம் நோக்கி

சுரையின் காய்ந்த மேலோடு துளை விழாது கிடக்க
அது உன் நினைவின் நீரதிலே மிதந்து பயணிக்கிறது
நாம் சேர எண்ணிய ஆல்ப்ஸ்மலை உச்சிக்கு

**கார்த்திகேயன் மாகா**

தெளுவு எடுக்கப் போகும்
சுமதி அக்கா
இதை மறக்காமல் கேட்டுவிடும்
உனக்கென்னப்பா ஆம்பளப் பையன்
ஸ்பின்னிங் மில்லில் ஒன்றரை சிப்ட் பார்த்துவிட்டு
வரும்போது
எல்லாரும் தூங்கிக் கொண்டுதான்
இருக்கின்றனர்
மொதப் பொறந்தநாளு முட்டாய
பொறந்தவளுக்கு கொடு
அக்கம் பக்கத்து பையன்களின்
பிறந்த நாளுக்கும் சேர்த்தே
அக்கா சொல்கிறாள்
பெண் மென்மையானவள்
இதை உடைப்பதே
பெண்ணியம்
சாதுவாகப் பழகும் தோழியும்
கடைசியாகச் சொல்லி முடித்தபோது
நானும் கேட்க நினைத்தேன்
தாய்மைக்கு
தம்பட்டம் அடிக்கத் தெரியாது
யாருக்கும் தெரிவதேயில்லை
பாதைகளைப்
பிரசவிக்கிற எங்களை
சுவட்டு முதலைகள்
நாளடைவில்
அன்னமாக்குவது

**சே தண்டபாணி தென்றல்**



# நிராகரிக்கப்பட்ட அந்த ஒற்றை செருப்பு

ஒற்றைசெருப்புகள்
கனத்த சோகங்களின்
மௌன சாட்சியாக வானத்தை பார்த்தபடி.
ஒற்றை செருப்புகள்
ஒவொவொன்றின் பின்னும் கதை
ஒன்று இருக்கலாம் உனக்கு புரியாதபடி.
நீ செல்லும் பாதையில்
நீ ஏறி செல்லும் மலைகளில்
ஆற்றின் கரைகளில்
ஊர்வலம் சென்ற பாதைகளில்
கலவரத்தின் சுவடுகளில்
நீ செல்ல விரும்பாத வீடுகளின் முற்றங்களில்
வீழ்த்தப்பட்ட விலங்கை போல்
முறிப்பட்ட கிளையை
போல் ஒய்ந்து கிடக்கலாம்
ஒரு சோகத்தை
ஒரு துயரத்தை
ஒரு தனிமையை
ஒரு விரக்தியை
ஒரு நிராகரிப்பை
சமந்தபடி உன்
வீட்டிலும் இருக்கலாம் அது

**கி.சம்பத்குமார்**



நிச்சலனமற்ற நீர்ப்பரப்பொன்றின்
பேரமைதியாய் நகர்கின்றன
உனது இருப்பினைத் தொலைத்த நாட்கள்...

பொய்மை ஏதுமற்ற உன் புன்னகைக்குள்
கொண்டிருக்கும் காதலைப்போலவே
நிறைந்திருக்கிறது கண்ணீரும்...

வாழ்வின் போக்கில்
வெவ்வேறான பாதைகளில் பயணப்பட்டு
கால ஓட்டத்தில் கிட்டத்தட்ட
காணாமல் போகும் தருவாயில்
நாம் ஒருவரை ஒருவர் மீட்டெடுத்திருக்கிறோம்...

நாம் இருவர் காண்பதும் ஒரே கனவைத்தான்
நாம் இருவர் நேசிப்பதும் நம்மைத்தான்...

நேரம் வாய்க்கும்போதான
உரையாடல்களுக்கு அப்பாலும்
நீயற்ற வெறுமைப் பொழுதுகள்
எனது தனித்த இரவுகளை
மிக நீண்ட இரவுகளாக மாற்றி விடுவதை
தவிர்க்கவே முடிவதில்லை...

**ஜானு இந்து**

இருண்ட கருவறை யுள் புகுந்த
ஈகைத் துளிரானேன்
விரலால் மெல்லிய தடவலும்
வயிற்றில் வரைவுகோணத்தின்
பனிக்குடத்துள் தங்கியவன் நான்

தோல்சுருங்கிய கொங்கை
பால்சுரக்க உயிர்நீந்த
உதிரம் பருகியவன் நான்
தீசுட்ட வலியும் தீராச்சுமையும்
பேறுகால முணங்கள் விழுங்க
நீள அண்டப்பெருவிழி கண்ட

உன்சிறுவயது முகச்சாயல் நான்
இழுக்கிய முகச்சதையுள்
இறுக கன்னம் அணைத்து
மறுதலித்து மிளிரும்
சேய்நான்

**மதுரை சிக்கந்தர்**

வண்ணத்துப்பூச்சி
வரைந்து
மகள்
பறக்கவிடுகிறாள்
என்னை.

**க. மகுடபதி**

உள்ளொன்று வைத்து
புறமொன்று சிரிக்கும்
உன் முகமுடியைக் கிழித்து
ஒருமுறை கேட்டுத்தான் பாரேன்

ஆறடி நிலத்தில் மட்டுமே
உன் ஆர்ப்பாட்டம் அடங்கி
ஆசுவாசமாய் இருக்க இயலும்
இப்போதே கொஞ்சம் உரைக்கிறதா கேளேன்

துரோகக்கோல் ஊன்றி
நஞ்சை நாக்கில் தடவி
பேசிய வார்த்தைகள் யாவும்
மரணப்படுக்கையில் முட்களாய் மாறும்
கண்திறந்துதான் பாரேன்

எதை விதைத்தாயோ
அதுதானே அறுவடைக்கும்

கண்ணாடி முன் நின்று
கேள்விகள் கேட்டுக்கொள்
ஒருமுறை மனம் உறுத்தினாலும் மார்க்கம் உண்டு
இல்லையெனில் பட்டுத்திருந்து
நிச்சயம் மரணம் உண்டு

**அகதா**



# முடிவற்று

கடைசியாய்
நாம்
மகிழ்ந்து பேசிய இராப்பொழுதொன்றில்
திடீரென வந்த
மாரடைப்பால்
நீ
செத்துப் போனாய்

காலம்
ஆண்டுகளை செரிக்க...

அப்போது
உன் கையிலிருந்த
நீ வாசித்து முடிக்காத
புத்தகத்தில்
இப்போதும்
அப்படியேதான் இருக்கிறது
உன்னால்
அடையாளத்திற்காக
தாள் முனை மடிக்கபட்ட
அந்தப் பக்கம்

துருவன் பாலா



# இஃது_அவர்களுக்கானதல்ல

உங்களுக்கும் எனக்குமானது இது
ஓர் உடன்படிக்கை என்றோ
ஒரு சமரசம் என்றோ
ஒரு புரிந்துணர்வு என்றோ
எதுவானாலும் வைத்துக் கொள்ளுங்கள்

மனிதம் கிழிபடும் போதெல்லாம்
என்னுடன் உங்கள் குரலும்
மதம் கடந்தோ மொழி கடந்தோ
ஒலிக்கப்படுகிறதெனில்
மொழியும் மதமும் தோன்றா காலத்தின்
பின்னோடி மனிதரென
அவர்கள் வேண்டுமானால் நினைக்கட்டும்

இது நமக்கானது
சிவப்புக் குருதியில் இன்னும்
இதய நாளங்ளில் மட்டுமே
மனிதர்களைத் தேடுவது
அணுவாயுதங்களில் சிதையும்
உயிர்களனைத்திற்கும் கண்ணீரில் நனைவது
நிறங்களிலோ வழிபடும் நெறிகளிலோ
தூரம் விலகி விசும்புவது

உங்கள் நம்பிக்கைகளில் அவர்கள்
சிவப்பு வண்ணம் பூசலாம்
நெஞ்சுக்கெதிராகவும் ரவைகளை நீட்டலாம்
அவர்களின் வட்டங்களிலிருந்து
நிறம் பிரித்து நீக்கப்படலாம்
உலகமற்ற ஓர் உலகத்தில்
நீங்கள் நிறுத்தப்பட்டு விசாரிக்கபடலாம்

விடுங்கள்...
இது அவர்களுக்கானதல்ல

**முனியாண்டி ராஜ்**

அவளிடை வன்புகும் அழகியகாற்றும் இன்புறும்
பொழிலிடை தேன்வண்டு துழவியதேகம் தான்மறவும்....

குழலிடைகூசி குறைததும்பும் மெல்லிசையும் இதம்தரும்
குழவிகொட்டிய பிறைமார்பாய் சொல்லிடாது பதமிழக்கும்...

புனலிடை பொங்கிடும் சுனைநீராய் அவையேறும்
தனதிடை தாங்கியகலை நினைவாலே சுவையேற்றும்...

மதயானை உதட்டோரம் வதம்காண பதனிடுமே
இதழ்பொருத்தி அதனாசை இதம்காண நிதம்வருமோ...?

பல்லாண்டு நில்லாதென வெல்லாமனம் வில்லானது
இல்லாதுனை பொல்லாக்கீரை வல்லாரையுண்டுஞ்
செல்லாதது...

**ரா.த.ஜீவித்தா**

# மாரியின் வரலாறு

வார்த்தைகள் வற்றிப் போன
தொண்டையை ஒத்திருந்தது
கிராம எல்லையில்
வாய் பிளந்தபடி தவிக்கும்
ஒற்றைக் கிணறு

ஜாதியைக் காரணம் காட்டி
சபிக்கப்பட்ட கிணறு
பௌர்ணமிக் காலங்களில்
மாரி நீர் இறைப்பதாகக் கேட்ட
ஒரு சிலரின் தயவால்
பேய்க்கிணறாகவும் ஆனது

மாலை சரிந்தபின்
கிணற்றுக்குத் திரும்பும்
பறவைக் கூட்டங்கள்
குஞ்சுகள் கண்ணயர
மனிதர்கள் மறந்த
மாரியின் வீர வரலாற்றை
பாடுகின்றன இன்றளவும்

பிரேம பிரபா



உன்னையும் என்னையும்
தட்டி தட்டி உசுப்புகிறது
மௌனம்..
விடிய விடிய
அணைக்கப்பட்ட தொலைக்காட்சியில்
தெரியும்
உன்னையும் என்னையும்
பார்த்துக்கொண்டிருக்கும்
நிகழ்ச்சிக்கு என்ன பெயர்..
மௌனஊடல் கடந்த
ஓர் நொடியில்
விருட்டென்று உதறிச்செல்லும்
பார்வையில் ஒட்டிக்கொல்கிறது
மறு ஊடலுக்கான
தொடக்கப்புள்ளி..
உடனடியாக வேண்டும்
வேறென்ன
கொஞ்சம்மழையும்
கொஞ்சும் பாடலும்
நிறைய நீயும்.

**தோழன் பிரபா**



அனுபவிப்பதற்குள்...
எல்லாம் 'அடங்கிப் போய்விடுகிறது'...
வாழ்க்கை.

**ரூ:பஸ் வி ஆண்டனி**

# பனைமரக்கவிதைகள்

எங்களுக்கு கிளைகள்
எங்கும் இல்லையென்ற
விளம்பரங்கள்
இம்மரங்களுக்கும்
பொருந்தும்.

பூமிக்குழந்தை
சப்புகொட்டியபின்
வானக்குழந்தைக்கு நீட்டிடும்
பச்சை லாலிபாப்கள்..
பனைமரங்கள்.

ஓலைமறை
பானைமறையென
குலைகுலையாய்
காய்த்திருக்கும்...

உச்சிமர
கள்பானைகள்.

கயிற்றால்
கால்விலங்கிட்டு
எற்றக்கைதிகளாகுவர்...

மரமேறுபவர்.

கள்வடி குருத்துகளின்
சொட்டுநீர் பாசனத்தில்
செழிப்பாய் வளரும்..

போதைப்பயிர்.

ஓலைப்படகுகளின்
பயணங்கள் மிகவும்
இனிமையானவைதான்..

நுங்குச்சுளைகள் தானே
அவற்றின் பயணிகள்.

நோண்டியபின்
நுங்குகளெல்லாம்
முக்கண் ரோதைகளாகி
கோடிடும்
மண்சாலைகளில்.

விரல்களை
வெட்டிவிட்டு உள்ளங்கைகளை
விசிறிகளாகிவிடுகின்றோம்...
பனையோலைகள்.

கருப்பு மையில்
செங்குத்தாய்
எழுதிய நெடுங்கவிதை
பனை

**ஆனந்த்**

# மழை இரவுகள்

முற்றுப் பெறாத
ஒரு பௌர்ணமி நிலவு
உடை அசைக்கும் காற்று
தெள்ளத் தெளிந்த
வானத்தில் என் கண்களுக்கு மட்டும்
சிக்கியது இரு தங்கமீன்கள்
நான் சுவாசிக்கவே
பிறந்திருக்கும் இந்தக் காற்று
முகம் மோதி முத்தமிடுகிறது
குழல் அசைத்து சீண்டுகிறது
கால்கள் நிலம் தொடவில்லை
தரையிறங்கின சில மேகத் துண்டுகள்!

**கார்த்திகா அ**



வடக்கே குடிபெயர்ந்து வருடங்களானாலும்
காலை ஏழுமணியானால் புரியாத மொழியில்
எதையோ கூவிக்கூவி விற்கும் அந்த முதியவர்
குரல் மட்டும் அடுக்குமாடிக்
குடியிருப்பின் ஐந்தாம் தளம்
ஏறி வந்து எழுத மறந்த கவிதை வரிகளை
எனக்கு நினைவூட்டி மெல்லத் தேய்கிறது...

**ஜி ராஜன்**

ஓர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு

இப்படியெழுதியிருக்கின்றேன்

சொந்தபந்தங்களின்

தேக நலன்கேட்டு

மாடு கன்று ஈன்றதாயென்று

எத்தனைமுட்டை நெல் அறுவடையானதுயென்று

கொய்யாமரம் காய்த்திருக்காயென்று இப்படி ஏதேதோ
கேட்டுவிட்டு

குறிப்பென்று குறிப்பாய் அதன் தேக விளிம்புகளில் என்
செலவிற்கு நூற்றைம்பது பணம் அனுப்புங்களென்று இப்படித்தான்
இன்னும் உயிர்ப்போடிருக்கு என் இறந்தகாலம் குடைக்கம்பியில்
என் அப்பாசெய்த கொக்கியில் தலைகீழாய் தொங்கிகொண்டு

பழுப்பேறிய அந்த வெளிர்நீல காகிதத்தில்.

**வ.முகிலழகி**



கடைமடையைக்காரனின்
வலியறியும் நாற்றுகள்...
பார்த்து பார்த்துதான் வளரும்...

**பொள்ளாச்சி முருகானந்தம்**

# திவ்யாவின் கப்பல்

ஒரு மழைக்காலத்தில்
செய்யப்பட்ட காகிதக்கப்பல்
மீது பயணம் செய்கிறாள் திவ்யா...

சிறுதூரல்களின் அடர்த்தியில்
காகிதங்களில் ஓட்டை
விழுந்திடுமென அச்சமும்
கொள்கிறாள்....

சட்டென இடிக்கும் இடியினோசையில் கிளம்புகிறது கப்பல்...

உற்சாகம் கொண்டவள்
தன் இருகைகளையும்
குட்டைநீரில் துடுப்புகளாக்கி
உந்த வைக்கிறாள்....

காற்றும் மழைத்தூரலும்
பலமாய் இருக்கவே
திண்டாடிப்போகிறாள்...

எப்படியும் கரை சேர்க்கவேண்டுமென
பத்தடி குட்டைக்குள்
இக்கரையிலிருந்து அக்கரைக்கு கடினமாய்
முயற்சித்து முன்னேறியதும்
நிம்மதிப்பெருமூச்சையடைகிறாள் திவ்யா....

நனைந்த கப்பலை எடுத்து
உலர வைக்க மெல்ல பிரிக்கிறாள்....

"அப்பா அம்மா குட்டித்தம்பியென
பெயரெழுதியிருப்பதும்
நனையாமல் இவர்கள்
பயணம் செய்து கரையேறிப்பதையும் மகிழ்ச்சியுடன் புன்னகைத்து
வென்றதை மழைமட்டுமே
அறிந்தவொரு அற்புதம்...

**ராம் பெரியசாமி**

# பிரியங்களின் கூடு

செல்லச் சண்டைகளில்
எறிந்த சொற்கள்தான்
செங்கற்களாயிற்று..
முத்தங்களின் ஈரத்தைச்
சாந்தாக்கினோம்..
முறுக்குக் கம்பிகளாய்
இறுக்க அணைப்புகள்..
உறுத்தாத மணல்துகளாய்
நிறுத்தாத காமங்கள்..
இவ்வாறாகச் சமைத்த வீடு
அழகானதும் மட்டுமல்ல
நமதானதும்கூட..

**மஞ்சு விஸ்வநாதன்**

மொழிக்கூச்சலற்ற
ஸ்பரிஷபாஷைதான்
உனக்கும் எனக்குமான
விரல்தூது

மயிர்க்கால்கள்
நின்றபடி
நடக்கும் பூக்குமென்றோர்
அதிசயத்தை நிகழ்த்திவிட்டு
நெஞ்சகழ்ந்து மறைந்து
வேராகிப் போகுமந்த
மொழியற்ற மொழியின் பிள்ளைகள்தான்
உன்னென் விழிக்கூத்துகள்

என் தோளிலும் உன் தோளிலும்
மாற்றி மாற்றிச் சுமக்கும்
உடையா மனவண்ணக்குமிழ்க்குழந்தைகள்
பேசட்டுமினியொரு புதுமொழியை

**ரா.ராஜசேகர்**

பொருளற்று கழிந்து கொண்டிருக்கும்
பொழுதுகளின் இறுதியில்
வந்து விடுகிறாய் நீ...
கவிதையின் கடைசி
வரி போல..!!!

**யாழினி யாழ்**



# அப்பாக்களின் தேவதைகள்

விஷேச வீடுகளில்,,
"அம்மா பிடிக்குமா
அப்பா பிடிக்குமா.."
எனக்கேட்டு யாரேனும் கன்னத்தை கிள்ளினால்,,,
அம்மாக்களின் இடுப்பில் அமர்ந்திருந்தாலும்..
அப்பாக்களை கை காட்டுவார்கள்..

காய்ச்சல் வந்து,
குணமாகிவிட்ட விடுமுறை நாளில்,,
பொம்மையை பாப்பாவாக்கி..
பொம்மைக்கு அப்பாவாக
நடந்து கொள்வார்கள்,,

அம்மாக்கள் வீட்டிலிருந்தாலும்,,
அப்பாக்களிடம் முதன்முதலில்
காட்டுவதற்காக,,
கோலப்போட்டியில் வாங்கி வந்த
சில்வர் தட்டை,,
புத்தகப்பைக்குள் ஒளித்து வைப்பார்கள்...

அம்மாக்களும் தம்பிகளும் தூங்கிவிட்ட
இரவில்...
அப்பாக்களின் வண்டிச்சத்தம் கேட்டதும்
ஓடிவந்து கதவு திறப்பார்கள்...

பொட்டானிகல் கார்டனுக்கு
சுற்றுலா சென்றுவரும்
பேருந்தில்,
அத்தனை தோழிகளும் விதவிதமாய் ரோஜா நாத்தை
பற்றியபடி அமர்ந்திருக்க,,
அவர்கள் மட்டும் அப்பாவிற்கு பொருத்தமான
ஸ்வெட்டரோடு அமர்ந்திருப்பார்கள்..,

ஐந்தாறு அழகான ஆண்களின்,
காதல் கடிதங்களை புறக்கணித்திருந்தாலும்..
அப்பாக்கள் வீட்டிற்கு அழைத்துவரும்,
சுமாரான மாப்பிள்ளையை வெட்கத்தோடு பார்ப்பார்கள்..

சமையல் குறிப்பிற்காக அம்மாக்களின் அலைபேசிக்கு
அழைத்துவிட்டு,,,
அப்பாக்களது நாளொன்றின் சிகரெட் எண்ணிக்கை
குறித்து,,
விசாரித்துக்கொண்டு இருப்பார்கள்..

பிரசவ அறையில் இடுப்பு வலியை மறந்து,,
அந்த புதிய சிசுவிற்கு அப்பாவின் நாசி
அப்படியே அமைந்திருப்பதை ரசித்துக்கொண்டு இருப்பார்கள்,,,

அண்ணன்கள் ஆகவேண்டிய வேலையை பார்த்திருக்க,,
மனைவிகள் புகைப்படத்தில் சிரித்திருக்க,,
பிரேதமாகிவிட்ட அப்பாக்களின் அருகிலமர்ந்து
நிஜமாய் அழுதுகொண்டு இருப்பார்கள்...

அப்பாக்களின் தேவதைகள்..!

**கவிதை மொழியன்**